# சந்திரிகா – ரணில் சந்திப்பு



முன்னாள் ஜனாதிபதியும் தெற்காசிய ஆய்வுக்கான கொள்கை அமைப்பின் தலைவியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். ஜாவத்தையிலுள்ள ஐ.தே.க. அலுவலகத்திலேயே இந்தச் சந்திப்பு இடம் பெற்றது. அனைத்து அரசியல் கட்சிகளுடனுமான சந்திப்பு என்ற அடிப் படையில் முதலில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருடன் இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஜே.சுஜீவகுமார்)